**STARTING TIME 10.59 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 29/2019**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 06.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **தனலட்சுமி** | Husband Name | : |
| Address | : | | |
| Calling | : | Age | : |

**2–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1. நான் எதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் எனது தாய் வீட்டு சொத்தில் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் மூலம் பாகம் கேட்டு அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால், அனுப்பினேன்.**

**2. தாவா சொத்தில் உள்ள எ அட்டவணையில் உள்ள 1வது அயிட்ட சொத்தில் மொத்தம் ஏக்கர் 3.83 செண்ட்டில் பொதுவில் 70 செண்ட் என சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மீதி விஸ்தீரணத்திற்கான உரிமையாளர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. அந்த ஏக்கர் 3.83 செண்ட்டில் 70 செண்ட் போக மீதி சொத்துக்களின் உரிமையாளர் பெயர் என்னவென்றால், அதுபற்றி தெரியவில்லை.**

**3. தாவா சொத்தில் உள்ள எ அட்டவணையில் உள்ள 2வது அயிட்ட**

சொத்தில் மொத்தம் ஏக்கர் 5.67 செண்டில் பொதுவில் 50 செண்ட் என சொல்லி உள்ளேனா என்றால் சரிதான். அந்த 50 செண்ட் போக மீதி விஸ்தீரணத்தின் உரிமையாளர் யார் என்றால் அந்த சொத்தில் நடேசன் மற்றும் ராஜ் ஆகியோர்களுக்கும் உரிமை உள்ளது. அவர்கள் இவ்வழக்கில் தரப்பினர்களாக உள்ளார்களா என்றால் இல்லை.

4. தாவா சொத்தில் எ அட்டவணையில் உள்ள 1, 2–வது அயிட்ட சொத்துக்களில் குறிப்பிட்ட விஸ்தீரணத்தை பொறுத்து மட்டும் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளதால், மீதி விஸ்தீரணத்தின் உரிமையாளர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு சேர்க்காததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. எனவே, நான் பாகம் கேட்கும் விஸ்தீரணத்தை நான் எல்லைகளுடன் குறிப்பிட்டு சொல்லாததால், அதை பிரித்து கொடுக்க இயலாது என்றால் சரியல்ல. மற்ற உரிமையாளர்களை சேர்க்காததால், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

5. தாவா சொத்துக்களை தவிர பாகம் பிரிக்கப்பட வேண்டிய வேறு சொத்துக்களும் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு பாகம் பிரிக்கப்பட வேண்டிய இதர சொத்துக்களை இவ்வழக்கில் சேர்க்காததாலும் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

6. ஏற்கனவே தாவா சொத்துக்களில் சில சொத்துக்களை 2ம் பிரதிவாதி மற்ற பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த காரணத்தினால் தான் இவ்வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால், சரிதான். விற்பனை செய்யவில்லை என்றால் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கமாட்டேன் என்றால் சரிதான், சொத்து அப்படியே இருக்கவேண்டும் என்று தான் விரும்பினோம்.

7. 2ம் பிரதிவாதி, 3 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்கு 02.09.2015 அன்று தாவா சொத்துக்களில் சிலவற்றை கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியும்

என்றால் சரிதான். நான் இவ்வழக்கை 05.11.2015 அன்று தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி, 3 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களில் சிலவற்றை உரிய கிரைய தொகை பெற்றுகொண்டு தான் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரிதான்.

8. அவ்வாறு கிரையம் செய்த போதே 3 முதல் 7 வரையிலான பிரதிவாதிகளுக்கு 2ம் பிரதிவாதி சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரிதான். விற்பனை செய்த பிறகு அந்த சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். அதனால் 2ம் பிரதிவாதி விற்பனை செய்த சொத்துக்களில் அனுபவத்திலும் இல்லை என்றால் சரிதான். எனவே தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதி, 3 முதல் 7 வரை பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்துவிட்ட நிலையில் நான் தாவா சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்வது தவறு என்றால், சரிதான், கிரையம் பெற்றவர்கள் தான் அனுபவத்தில் உள்ளார்கள். எனவே தாவா சொத்தை நான் கூட்டாக அனுபவித்து வருவதாக சொல்லி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு சட்டபடி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

9. எனது தாத்தா நடேசன், எனது அம்மா மல்லிகா பெயருக்கு 01.09.1971 அன்று வா.சா.ஆ–1 செட்டில்மெண்ட் பத்திரம் எழுதியதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் நான், 1, 2 பிரதிவாதிகள், எனது தாயார் ஆகியோர் சேர்ந்து பொன்னுசாமி என்பவருக்கு 2ம் பிரதிவாதி திருமண செலவிற்காக விற்பனை செய்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல, அதுபோல் சொல்லவில்லை, அந்த சமயத்தில் எனக்கு 9 வயது தான் ஆனது.

10. 2ம் பிரதிவாதிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1987 ஆம் ஆண்டு ஆனது, ஆனால் சரியான வருடம் குறிப்பாக தெரியவில்லை. அப்போது

எனக்கு என்ன வயது என்றால் 9 அல்லது 10 வயது ஆகும். தற்போது எனக்கு என்ன வயது என்றால் 42 அல்லது 43 ஆகும். 2ம் பிரதிவாதிக்கு 09.09.1990 அன்று திருமணம் ஆனது என்றால் எனக்கு தேதி தெரியவில்லை. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 1997 ல் ஆனது.

11. தாவா தாக்கல் செய்த போது பொன்னுசாமி என்பவருக்கு ஏற்கனவே கிரையம் செய்த விவரம் எனக்கு தெரிந்ததால் தான் அதைப்பற்றி சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ–1 தான பத்திரத்தில் எனது தாயார் அவரது காலம் வரை சொத்துக்களை அனுபவித்து வர வேண்டும் என்றும் அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லி இருந்தும் அவரது வாரிசுகளான நாங்கள் அனைவரும் சேர்ந்து அந்த நிபந்தனையை மீறி பொன்னுசாமி என்பவருக்கு கூட்டாக கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால், சரியல்ல, அந்த சமயத்தில் எனக்கு 9 வயது தான் ஆகி இருந்தது.

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ENDING TIME 11.34.A.M.

G YUVARAJ

Digitally signed by G YUVARAJ
DN: cn=G YUVARAJ, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN